# சைவ நெறி

# தரம்

# 2

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

**முதலாம் பதிப்பு - 2016**
**இரண்டாம் பதிப்பு - 2017**
**மூன்றாம் பதிப்பு - 2018**
**நான்காம் பதிப்பு - 2019**

**பதிப்புரிமையுடையது.**

ISBN 978-955-25-0033-6

**கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைச் சபையின் ஆலோசனைகள் பெறப்பட்டு வெளியிடப்படுகின்றது.**

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
இல 105 - 1 லேக் வீதி, அம்பன்தல, முல்லேரியா புதிய நகரத்தில்
அமைந்துள்ள பராமவுன்ட் சொலூஷன்ஸ் பிரைவட் லிமிடெட்
அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



**''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம் நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''**

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்திறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

## *முன்னுரை*

*நீங்கள் பிறந்திருப்பது இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப் போற்றப்படக்கூடிய ஒரு நாட்டிலாகும். உங்கள் நாட்டை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அது ஒரு சிறிய நாடாகத் தென்பட்டாலும் அதன் பெறுமதி விலைமதிப்பற்றதாகும். இவ்வாறான பெருமிதமிக்கதொரு மண்ணில் பிறந்துள்ள நீங்கள் அனைவரும் உண்மையிலேயே அதிஷ்டசாலிகள். மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் நன்கு கல்வி கற்று நற்குணமும் அறிவும் சக்தியும்மிக்க பிரசைகளாகி, எதிர்கால உலகை ஒளியூட்டுவீர்கள் என்பதே எமது ஒரே எதிர்பார்ப்பாகும். அந்த எதிர்பார்ப்பை அடைவதற்குக் கல்விக்கான சகல வசதிகளையும் இலவசமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்கின்றது. அதன் ஒரு கட்டமாகவே இந்நூலையும் அது உங்களுக்கு வழங்குகின்றது.*

*ஆரம்பப் பிரிவுப் பாடத்திட்டத்திற்கேற்ப இதுவரைக்கும் தரம் 1, 2, 3, 4 இற்கான புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு தரம் 5 இற்கான புதிய பாடநூல்களின் அறிமுகத்துடன் ஆரம்பப் பாடத்திட்ட மறுசீரமைப்பு எனும் இக்கட்டம் நிறைவு பெறுகின்றது. தரம் 1 முதல் தரம் 5 வரை கற்கும் ஆரம்பப் பிரிவு மாணவருக்காக அரசு ஏறக்குறைய 30 வகையான பாடநூல்களைத் தயாரித்து வழங்குகின்றது. இவ்விலைமதிப்பற்ற வளத்தினைப் பயன்படுத்தி வாழ்க்கையை வளமானதாக ஆக்கிக் கொள்வது உங்கள் அனைவரினதும் கடமையாகும்.*

*இப்பாடநூலை உங்கள் கைகளில் தவழச்செய்வதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.*

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
*கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்*
*இசுருபாய*
*பத்தரமுல்ல.*
*2019.04.10*

## *கண்காணிப்பும் மேற்பார்வையும்*

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## *வழிகாட்டல்*

**டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**

பிரதிக் கல்வி ஆணையாளர் (அபிவிருத்தி)

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## *இணைப்பாக்கம்*

**சி. காண்டீபன்**

அபிவிருத்தி அலுவலர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## *பதிப்பாசிரியர் குழு*

**சைவப்புலவர் சு.செல்லத்துரை**

அதிபர் (ஓய்வு)

**கலாநிதி க. இரகுபரன்**

சிரேஷ்ட விரிவுரையாளர்

தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.

**கலாநிதி உ. நவரட்ணம்**

பணிப்பாளர் (ஓய்வு)

தமிழ் மொழிப் பிரிவு

தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

**வீ. என். எஸ். உதயசந்திரன்**

சிரேஷ்ட விரிவுரையாளர்

முன் பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

## நூலாக்கக் குழு

**வானதி காண்டீபன்**

முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரி

தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

**வாஹினி ஸ்ரீதரன்**

ஆசிரியர்

திருக்குடும்பக் கன்னியர் மடம், பம்பலப்பிட்டி.

## பதிப்பாசிரியர் - மொழி

**இ.மகேந்திரன்**

ஆசிரியர்

நோவூட் தமிழ் மகா வித்தியாலயம், நோவூட்.

## சரவை நோக்கு

**எஸ். வடிவேல்**

ஆசிரியர்

இ/ இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம், இரத்தினபுரி.

## சித்திரம்

**ஆர்.கௌசிகன்**

பாடசாலை ஒழுங்கை, புகையிரத வீதி, தெஹிவளை.

## முகப்பு வடிவமைப்பு

**சத்திவேல் சத்தியசீலன்**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## நூல் வடிவமைப்பு

**சத்திவேல் சத்தியசீலன்**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**ந.துஷாந்தன்**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | விக்கினேஸ்வரர் | 1 |
| 2 | சிவபெருமான் | 4 |
| 3 | சந்திரசேகரர் | 7 |
| 4 | சமய வாழ்வு | 12 |
| 5 | உயிர்களிடத்தில் அன்பு | 21 |
| 6 | விலை மதிப்பற்ற சொத்து | 25 |
| 7 | பிட்டுக்கு மண் சுமந்த பெருமான் | 28 |

8 புதுவருடப்பிறப்பு 38
9 சிவசின்னங்கள் 46
10 பொற்றாளம் பெற்றார் 49
11 கோயிலுக்குச் செல்வோம் 52
12 திருக்கேதீச்சரம் 56
13 பஞ்சம் போக்கிய படிக்காசு 60
14 ஒற்றுமையின் பலம் 64

15 இயற்கையைப் பேணுவோம் 67
16 உண்மையின் உயர்வு 70
17 பழம் சுடுமா? 73
18 துயர் துடைப்போம் 76
19 நவராத்திரி வழிபாடு 80
20 கை நிறைய உணவு 85
21 கொன்றை வேந்தன் 88

உ

சிவமயம்

# கடவுள் வணக்கம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

# 1 விக்கினேஸ்வரர்



அப்பம் முப்பழம்
அமுது செய்தருளிய
தொப்பை அப்பனைத்
தொழ வினை அறுமே!

பிள்ளையாரை வணங்குவோம்.

பிள்ளையார் விக்கினங்களைத் தீர்ப்பவர்.

அதனால் அவரை விக்கினேஸ்வரர் என்று அழைப்போம்.

விக்கினேஸ்வரரை வழிபட்டு, வேலைகளைத்

தொடங்குவோம்.

**விக்கினேஸ்வரரைத் தொழுவோம்;**

**வளம் பல பெறுவோம்.**

## பயிற்சி

**சரியாக இணைப்போம்.**

முப்பழம்



தொழுவோம்



விக்கினேஸ்வரர்



## செயற்பாடு

1. ‘அப்பம் முப்பழம்’ என்ற பாடலைப் பாடுவோம்.

2. குட்டிக் கும்பிடுவோம்; தோப்புக்கரணம் போடுவோம்.

# 2 சிவபெருமான்



சிவபெருமான் எமது முழுமுதற் கடவுள் ஆவார்.

அவரே உலகைப் படைத்தவர்.

அனைத்து உயிர்களையும் காப்பவர்.

எல்லா உயிர்கள் மீதும் இரக்கம் உள்ளவர்.

**சிவபெருமானை வழிபடுவோம்;**

**அவர் அருள் பெறுவோம்.**

## பயிற்சி

**பொருத்தமான சொல்லை இடைவெளிகளில் எழுதுவோம்.**

**இரக்கம், சிவபெருமான், பிறை, காப்பவர்**

1. எமது முழுமுதற் கடவுள் ____________________

2. சிவபெருமான் எல்லா உயிர்கள் மீதும் ____________ உள்ளவர்.

3. சிவபெருமான் உயிர்களைக் ____________________

4. சிவனின் சடாமுடியில் ____________________ காணப்படுகிறது.

## செயற்பாடு

சிவபெருமானின் திருவுருவம் பற்றிக் கலந்துரையாடுவோம்.

# 3 சந்திரசேகரர்



ஒருநாள் பிள்ளையார் நடனம் ஆடினார்.

தொப்பை வயிறு குலுங்க ஆடினார்.

அதனைச் சந்திரன் பார்த்தான்.

அவனுக்கு அடக்கமுடியாத சிரிப்பு வந்தது.



பிள்ளையாருக்குக் கடுங்கோபம் வந்தது.

சந்திரனைத் 'தேய்ந்து போவாய்' எனச் சபித்தார்.

சந்திரன் தேய்ந்து தேய்ந்து பிறை வடிவமானான்.



சந்திரன் பயந்தான். தன் தவறை உணர்ந்தான்.

சிவபெருமானிடம் ஓடினான்.

அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.



*சிவபெருமான் சந்திரனைப் பார்த்து இரங்கினார்.*

*பிறைச்சந்திரனைத் தன் சடாமுடியில் சூடிக்கொண்டார்.*

*அதனால் சிவபெருமான்* ***சந்திரசேகரர்*** *ஆனார்.*

**கடவுளை வணங்குவோம்;**

**கருணை பெறுவோம்.**

## பயிற்சி

**பொருத்தமான சொல்லை இடைவெளிகளில் எழுதுவோம்.**

**சந்திரசேகரர்,ஏளனம், சந்திரன், பிறை**

1. பிள்ளையாரின் நடனத்தைப் பார்த்து ________________ சிரித்தான்.

2. சந்திரன் ________________________ வடிவம் ஆனான்.

3. சந்திரனைச் சடாமுடியில் சூடிக் கொண்டதால் சிவபெருமான் ______________________ ஆனார்.

4. நாம் பிறரை ____________________செய்யக் கூடாது.

## செயற்பாடு

'சந்திரசேகரர்' கதையை நாடகமாக நடிப்போம்.

# 4 சமய வாழ்வு



ஆரணி அதிகாலையில் எழுந்தாள்.



அகிலனும் எழுந்தான்.



இருவரும் நீராடினர்.



திருநீறு பூசினர்.



பூப் பறித்தனர்.



ஆரணி தீபம் ஏற்றினாள்.



இருவரும் இறைவனை வணங்கினர்.



தேவாரம் பாடினர்.

திருச்சிற்றம்பலம்

***சொற்றுணை வேதியன் சோதி வானவன்***
***பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ***
***கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்***
***நற்றுணையாவது நமச்சிவாயவே.***

திருச்சிற்றம்பலம்

- திருநாவுக்கரசர்





அகிலன் செடிகளுக்கு நீரூற்றினான்.



ஆரணி வீட்டைக் கூட்டினாள்.



இருவரும் காலை உணவு உண்டனர்.



பெற்றோரை வணங்கினர்.



பாடசாலைக்குச் சென்றனர்.

**நாளும் நல்லன செய்வோம்;**

**நலம் பல பெறுவோம்.**

## பயிற்சி

**படத்துக்குப் பொருத்தமான வாக்கியம் எழுதுவோம்.**



திருநீறு பூசுவோம்.









## செயற்பாடு

'சொற்றுணை வேதியன்' தேவாரத்தைப் பண்ணோடு பாடுவோம்.

# 5 உயிர்களிடத்தில் அன்பு



குருவிக் கூடு ஒன்று மரத்தில் இருந்தது.



பலத்த காற்று வீசியது.



குருவிக் கூடு கீழே விழுந்தது; குஞ்சும் கீழே விழுந்தது. அது ''கீச் கீச்'' என்று கத்தியது.



அகிலனும் குமரனும் குருவிக் குஞ்சைக் கண்டனர்; அதனை அன்புடன் தூக்கினர். குஞ்சு பயத்தால் நடுங்கியது.



குஞ்சைக் கூட்டில் வைத்தனர்.
கூட்டை மரத்தில் வைத்தனர்.

**பிராணிகள் மீது அன்பு செலுத்துவோம்.**

## பயிற்சி

**தாய்க்குருவி குஞ்சுக்கு இரை ஊட்டுகின்றது.**

**(காட்சியை வரைவோம்)**

## செயற்பாடு

நாம் பிராணிகள்மீது இரக்கம் காட்டும் விதத்தைக் கூறுவோம்.

# 6 விலை மதிப்பற்ற சொத்து



அன்பழகனும் அறிவழகனும் சகோதரர்கள்.

அவர்கள் பெற்றோரிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டவர்கள்.

இவர்கள் நன்கு படித்து நல்ல தொழில் செய்தார்கள்.

பெற்றோருடன் இனிதாக வாழ்ந்தார்கள்.

ஒரு நாள் கடும் மழை பெய்தது.

ஊர் எங்கும் வெள்ளம் பெருகியது.

மக்கள் உடைமைகளுடன் ஊரை விட்டுச் சென்றார்கள்.



பெற்றோருக்கு நடக்க முடியவில்லை.

''நாங்கள் வீட்டிலேயே இருக்கிறோம். பெறுமதிமிக்க பொருள்களை எடுத்துச் செல்லுங்கள்.'' என்று பெற்றோர் கூறினார்கள்.

''நீங்கள்தான் எங்கள் பெறுமதிமிக்க சொத்து'' என்று பிள்ளைகள் இருவரும் கூறினார்கள்.

அன்பழகனும் அறிவழகனும் பெற்றோரைத் தோள்மீது சுமந்தார்கள்.

பாதுகாப்பான இடத்திற்குச் சென்றார்கள்.

பெற்றோரைப் போற்றுவோம்.

## பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புவோம்.**

1. அன்பழகனும் அறிவழகனும் ______________________


2. பெற்றோரே எமது கண்கண்ட ______________________

3. ______________________ கண் எனப் போற்றுவோம்.

## செயற்பாடு

இப்பாடத்தில் உள்ள படங்கள் தொடர்பாக உரையாடுவோம்.


# 7 பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்



ஆறு பெருகுகிறது.



''அணை கட்ட எல்லோரும் வாருங்கள்.''



‘‘சிவனே, அணை கட்ட எனக்குத் துணை யாரும் இல்லையே!.’’



சிவபெருமான் கூலியாளாக வருகிறார்.





‘‘உனக்காக நான் அணை கட்டுகிறேன்.

எனக்கு மிகவும் பசிக்கிறது.

கூலியாகப் பிட்டுத் தா.’’

கூலியாள் மண்ணை வெட்டுகிறார்; கொட்டுகிறார்; கூடையைச் சுமந்து ஆடுகிறார்.





அடிக்கடி பிட்டைச் சாப்பிடுகிறார்.




அணை கட்டி முடியவில்லை.

கூலியாள் நித்திரை செய்கிறார்.

அரசன் வருகிறான்.

அரசன், கூலியாளைப் பிரம்பால் அடிக்கிறான். அரசன் அடித்த அந்த அடி எல்லோர் முதுகிலும் படுகிறது.



கூலியாளாக வந்த சிவபெருமான்

மறைகிறார்.

**கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.**

## பயிற்சி

**விடை எழுதுவோம்.**

1. கூலியாளாக வந்தவர் யார்?

2. கூலியாள், கூலியாக எதனைக் கேட்டார்?


3. கூலியாளை அடித்தவர் யார்?

4. அரசன் அடித்த அடி ஏன் எல்லோர்மீதும் பட்டது?

## செயற்பாடு

'பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்' கதையை நாடகமாக நடிப்போம்.

# 8 புதுவருடப்பிறப்பு



நாம் சித்திரை மாதத்தில் வருடப்பிறப்பைக் கொண்டாடுவோம்.

புதுவருடம் பிறப்பதற்குமுன் வீட்டைக் கழுவுவோம்.

முற்றத்தைக் கூட்டுவோம்.

புதுவருட தினத்தில் மருத்துநீர் வைத்து நீராடுவோம்.

புதிய ஆடை அணிவோம்.



அகிலன் வாசலில் மாவிலை கட்டுகிறான்.

ஆரணி முற்றத்தில் கோலம் போடுகிறாள்.

அப்பா நிறைகுடம் வைக்கிறார்.

அம்மா குத்துவிளக்கு ஏற்றுகிறார்.




அம்மா பொங்கல் பொங்குகிறார்.

பாட்டி வடையும் முறுக்கும் சுடுகிறார்.



எல்லோரும் கூடிக் கடவுளை வணங்குவோம்.



பெரியோரிடம் ஆசிபெறுவோம்.

கைவிசேடம் பெறுவோம்.



அயலவருக்குப் பொங்கல், பலகாரம் கொடுப்போம்.

ஒன்றாக அமர்ந்து உண்போம்.



பட்டாசு கொளுத்துவோம்; ஊஞ்சல் ஆடி மகிழ்வோம்.

புத்தாண்டைக் கொண்டாடுவோம்;

புத்துணர்ச்சி பெறுவோம்.

## பயிற்சி

**படம் வரைவோம்.**

| | |
|---|---|
| குத்துவிளக்கு | பூமாலை |
| கோலம் | நிறைகுடம் |

# 9 சிவசின்னங்கள்



சிவபெருமானைக் குறிக்கும் அடையாளங்கள் சிவ சின்னங்கள் எனப்படும். விபூதி, உருத்திராக்கம் என்பன சிவசின்னங்கள் ஆகும். சிவசின்னங்களை அணிவது சைவ சமயத்தவரின் கடமையாகும்.

''சிவ சிவ'' என்று சொல்லித் திருநீறு பூச வேண்டும். வலது கையின் நடு மூன்று விரல்களாலும் விபூதியை எடுத்து நெற்றியில் பூச வேண்டும். ஔவையார் ''நீறில்லா நெற்றி பாழ்'' என்றார்.

கை, கால், முகம் கழுவிய பின்பும், குளித்த பின்பும் திருநீறு பூசுவோம். வீட்டை விட்டு வெளியே செல்லும் போதும், நித்திரைக்குச் செல்லும் போதும் திருநீறு பூசுவோம்.



***திருச்சிற்றம்பலம்***

*மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு*
*சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு*
*தந்திரம் ஆவது நீறு சமயத்திலுள்ளது நீறு*
*செந்துவர்வாய் உமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.*

***திருச்சிற்றம்பலம்***

-திருஞானசம்பந்தர்

**சிவபெருமானை நினைப்போம்; திருநீறு பூசுவோம்.**

## பயிற்சி

**விடை எழுதுவோம்.**

1. சிவ சின்னங்கள் ______________ , ______________

2. திருநீறு அணியும் சந்தர்ப்பங்கள் ______________,
______________

3. ______________ என்னும் தேவாரம் திருநீற்றின் பெருமையைக் கூறுகிறது.

4. ______________ எனக் கூறித் திருநீறு பூச வேண்டும்.

5. ______________ நெற்றி பாழ்.

## செயற்பாடு

'மந்திரமாவது நீறு ' என்ற தேவாரத்தைப் பாடுவோம்.

# 10 பொற்றாளம் பெற்றார்



திருஞானசம்பந்தர் ஒருநாள் திருக்கோலக்கா என்னும் கோயிலை அடைந்தார். கோயிலை வலம் வந்து சிவபெருமானை வணங்கினார். ‘மடையில் வாளை’ என்னும் பதிகத்தைப் பாடினார்.

தமது திருக்கைகளினால் தாளம் போட்டார். சம்பந்தர் கைகள் வலிக்கத் தாளம் போடுவதை சிவபெருமான் கண்டார்; இரக்கம் கொண்டார்.

''நமசிவாய'' எனும் திருவைந்தெழுத்துப் பொறித்த பொற்றாளத்தைச் சம்பந்தருக்கு அருளினார். சம்பந்தர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். தாளத்தைத் திருமுடி மேல் வைத்து இறைவனையும், இறைவியையும் வணங்கினார். பொற்றாளத்தால் தாளம் போட்டுப் பதிகம் பாடினார்.

**சம்பந்தரைப் போற்றுவோம்;**

**தேவாரம் பாடுவோம்.**

## பயிற்சி

**விடை எழுதுவோம்.**

1.திருஞானசம்பந்தர் பொற்றாளம் பெற்ற தலம் எது? ____________________

2.திருவைந்தெழுத்து என்பது யாது?

____________________

3.சம்பந்தர் எப்பதிகத்தைப் பாடிப் பொற்றாளம் பெற்றார்? ____________________

## செயற்பாடு

திருஞானசம்பந்தர் பற்றி அறிந்தவற்றைக் கூறுவோம்.

# 11 கோயிலுக்குச் செல்வோம்



கடவுள் எங்கும் இருக்கிறார். கடவுளைக் கோயிலிலே சிறப்பாக வணங்குகிறோம். கோயிலுக்குப் போவதற்குமுன் நீராடுவோம். தோய்த்து உலர்ந்த ஆடை

அணிவோம். விபூதி தரிப்போம். பூசைப் பொருட்களை எடுப்போம். கடவுள் நினைவோடு கோயிலுக்குச் செல்வோம்.

கோபுரத்தைக் கைகூப்பி வணங்குவோம். கை, கால் கழுவி உள்ளே செல்வோம். முதலில் பிள்ளையாரை வணங்குவோம். நெற்றியில் மூன்று முறை குட்டுவோம். தோப்புக்கரணம் போடுவோம். பின்னர் மூலமூர்த்தியை வணங்குவோம்.

வீதியை வலம் வருவோம். அங்குள்ள தெய்வங்களை வணங்குவோம்.

இறுதியாக சண்டேஸ்வரரை வழிபடுவோம். அர்ச்சனை செய்வோம். நிலத்தில் விழுந்து கும்பிடுவோம். விபூதிப் பிரசாதம் பெறுவோம்.

**ஆலயம் தொழுவது சாலவும் நன்று.**

## பயிற்சி

### இணைத்து எழுதுவோம்.

| | |
|---|---|
| 1. பூசைப் பொருட்கள் | சண்டேஸ்வரர் |
| 2. முதல் வணக்கத்திற்கு உரியவர் | பழம், பூ, தேங்காய் |
| 3. ஆலயம் தொழுவது | பிள்ளையார் |
| 4. இறுதியாக வணங்க வேண்டியவர் | சாலவும் நன்று |

1. பூசைப் பொருட்கள் - பழம், பூ, தேங்காய்
2. ____________________
3. ____________________
4. ____________________

## செயற்பாடு

கோயிலில் வழிபடும் முறைகளை அறிந்து கடைப்பிடிப்போம்.

# 12 திருக்கேதீச்சரம்



திருக்கேதீச்சரம் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இத்தலம் இலங்கையில் மன்னார் மாவட்டத்தில் மாதோட்டம் என்னும் இடத்தில் உள்ளது. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் இத்தலத்தைப் போற்றித் தேவாரம் பாடியுள்ளார்கள்.

இத்தலத்தில் சிவபெருமான் கேதீச்சரநாதர் என்னும் பெயரில் வீற்றிருக்கிறார். இறைவி கௌரி அம்பாள். இத்தலத்தில் பாலாவி என்னும் புனித தீர்த்தம் உள்ளது. இத்தலத்தில் மகா சிவராத்திரி தினம் சிறப்பாக நடைபெறும். வருடந்தோறும் வைகாசி மாதத்தில் திருவிழா நடைபெறும்.

**கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.**

*திருச்சிற்றம்பலம்*




***நத்தார் படை ஞானன் பசு ஏறி நனை கவிழ்வாய்***
***மத்தம் மத யானை உரி போர்த்த மணவாளன்***
***பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்***
***செத்தார் எலும்பு அணிவான் திருக் கேதீச்சரத்தானே.***

*திருச்சிற்றம்பலம்*

-சுந்தரமூர்த்திநாயனார்

## பயிற்சி

**திருக்கேதீச்சரக் கோயிலுடன் தொடர்புடைய விடயங்களை எழுதுவோம்.**



இறைவன்
1. ____________________

இறைவி
2. ______________

தீர்த்தம்
3. __________

அமைவிடம்
4. ________________

தேவாரம் பாடியோர்
5. ____________, ____________

சிறப்பான உற்சவம்
6. ____________________

## செயற்பாடு


‘நத்தார் படை’ என்ற தேவாரத்தைத் தாளம் போட்டு இசையுடன் பாடுவோம்.

# 13 பஞ்சம் போக்கிய படிக்காசு



திருவீழிமிழலை என்று ஒரு ஊர். ஒரு முறை அங்கு மழை பெய்யவில்லை; பெரும் வறட்சி; எங்கும் பஞ்சம். பஞ்சத்தால் மக்கள் வருந்தினர்.

திருவீழிமிழலைக்குத் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் வந்தனர். அவர்களுடன் அடியார் கூட்டமும் வந்தது.



ஊரில் உணவுக்குப் பெரும் தட்டுப்பாடு. அடியவர்களுக்கும் உணவு கிடைக்கவில்லை. திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் மக்களின் பசித் துன்பம் கண்டனர். இருவரும் வேதனைப்பட்டனர்; சிவபெருமானிடம் முறையிட்டனர்.



சிவபெருமான் தினமும் படிக்காசு கொடுத்தார். இருவரும் படிக்காசு மூலம் எல்லோருக்கும் உணவு வழங்கினர்.

**பிறர் துயர் களைவோம்.**

## பயிற்சி

**வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் எவ்வூருக்கு வந்தனர்?
2. மழை இல்லாமையினால் என்ன ஏற்பட்டது?
3. திருஞானசம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் சிவபெருமான் தினமும் என்ன கொடுத்தார்?

## செயற்பாடு

'பஞ்சம் போக்கிய படிக்காசு' கதையைக் கூறுவோம்.



# 14 ஒற்றுமையின் பலம்

கந்தசாமி வயதான விவசாயி; அவருக்கு ஐந்து ஆண் பிள்ளைகள்; அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை; எப்போதும் சண்டை பிடித்துக் கொண்டு இருப்பார்கள். இதனால் கந்தசாமி கவலைப்பட்டார். அவர் பிள்ளைகளுக்கு ஒற்றுமையின் சிறப்பை உணர்த்த விரும்பினார்.

ஐந்து தடிகளை எடுத்தார்; ஒன்றாகச் சேர்த்துக் கட்டினார். அதனைப் பிள்ளைகளிடம் கொடுத்து முறிக்கச் சொன்னார். பிள்ளைகளால் முறிக்க முடியவில்லை.

பின்னர் கட்டை அவிழ்த்தார்; தடிகளை வேறு வேறாக்கினார். ஆளுக்கொரு தடியைக் கொடுத்து, முறிக்கச் சொன்னார். ஒவ்வொரு தடியும் இலகுவாக முறிந்தது.

‘‘பிள்ளைகளே! நீங்கள் தனித்தனியே இருந்தால் பலமற்று விடுவீர்கள்; ஐவரும் ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே பலமானவர்களாக இருப்பீர்கள்’’ என்றார்.

ஒற்றுமையின் அவசியத்தைப் பிள்ளைகள் புரிந்து கொண்டனர். தந்தையிடம் மன்னிப்புக் கேட்டனர்; ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.**

## பயிற்சி

**கதையை ஒழுங்கு படுத்துவோம் இலக்கம் இடுவோம்.**

1. அவர்கள் ஒற்றுமை இன்றி சண்டை பிடித்தனர். ☐

2. ஒன்றாகச் சேர்த்துக் கட்டிய ஐந்து தடிகளைக் கொடுத்து முறிக்கச் சொன்னார். ☐

3. பின் தனித் தனித் தடிகளைக் கொடுத்து முறிக்கச் சொன்னார். ☐

4. கந்தசாமி வயதான விவசாயி. அவருக்கு ஐந்து ஆண் பிள்ளைகள். ☐

5. கந்தசாமி பிள்ளைகளுக்கு ஒற்றுமையின் பலத்தை உணர்த்த விரும்பினார். ☐

6. பிள்ளைகளுக்கு ஒற்றுமையின் பலம் புரிந்தது. ☐

7. அவர்களால் முறிக்க முடியவில்லை. ☐

8. தடி இலகுவாக முறிந்தது. ☐

## செயற்பாடு

இக்கதை எமக்கு உணர்த்தும் நற்பண்புகள் பற்றிக் கலந்துரையாடுவோம்.

# 15 இயற்கையைப் பேணுவோம்

பாடசாலை மணி அடித்தது. காலைப் பிரார்த்தனை வேளை. ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்று கூடி இறைவனை வழிபட்டார்கள். அதிபர் நற்சிந்தனை வழங்கினார்.

‘‘பிள்ளைகளே! உங்களைச் சூழ உள்ளவற்றைப் பாருங்கள். நீல வானம், வெள்ளை முகில்கள், ஒளி தரும் சூரியன், அழகிய பறவைகள், தென்றல் காற்று, அசையும் மரங்கள், வண்ண வண்ணப் பூக்கள், அனைத்துமே இயற்கையானவை; இனியவை; பயன் உள்ளவை.



இவற்றையெல்லாம் படைத்து எமக்களித்தவன் இறைவன். அவனுக்கு நன்றிகூறுவோம். இயற்கையைப் பாதுகாப்பது நமது கடமை. அதுவும் இறைவழிபாடே ஆகும்.''

அதிபர் கூறியது மாணவர்கள் மனதில் ஆழப்பதிந்தது. எல்லோரும் வரிசையாக வகுப்பறைகளுக்குச் சென்றார்கள்.

இடைவேளைக்கான மணி ஒலித்தது. மாணவர்கள் தாம் கொண்டுவந்த உணவைப் பகிர்ந்து உண்டார்கள். பாடசாலைத் தோட்டத்திற்குச் சென்றார்கள். செடி, கொடிகளுக்கு நீர் ஊற்றினார்கள். மகிழ்ச்சியாக வகுப்பறைக்குத் திரும்பினார்கள்.

**இயற்கையில் இறைவனைக் காண்போம்.**

## பயிற்சி

### விடை எழுதுவோம்.

1. காலைப் பிரார்த்தனை வேளையில் இடம்பெற்ற இரு செயற்பாடுகள்.

    1. ______________________  2. ______________________

2. இடைவேளையில் மாணவர்கள் செய்த இரண்டு செயல்களைக் கூறுக.

    1. ______________________  2. ______________________

3. நாம், ஏன் இறைவனுக்கு நன்றி கூற வேண்டும் ?

    1. ______________________________________________

## செயற்பாடு

மரஞ்செடிகள் நடுவோம்; நீரூற்றி வளர்ப்போம்.

# 16 உண்மையின் உயர்வு

பாடசாலை இடைவேளை நேரம். வெளியே ஒரே மழை. ஆரணியும் தோழிகளும் விளையாடினர். பந்தை எறிந்து பிடித்தனர். பூச்சாடி கீழே விழுந்து உடைந்தது.



ஆசிரியர் வகுப்பிற்கு வந்தார். ‘‘இது எப்படி உடைந்தது?’’ என்று கேட்டார். மாணவிகள் பயந்தனர். ஒருவரும் உண்மையைச் சொல்லவில்லை.

ஆரணி மெல்ல முன்னே வந்தாள். ‘‘மன்னிக்க வேண்டும் ரீச்சர், நாங்கள் விளையாடும்போது தவறுதலாகப் பூச்சாடி உடைந்து விட்டது. செய்த தவறுக்காக வருந்துகிறோம். எங்களை மன்னியுங்கள் ரீச்சர்’’ என்று பணிவோடு கூறினாள். உண்மை பேசிய ஆரணியை ஆசிரியர் பாராட்டினார். பிள்ளைகளே, ‘‘நாங்கள் பாடசாலைச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும்’’ என ஆசிரியர் அறிவுரை கூறினார்.

**‘‘உண்மை பேசி உத்தமராய் வாழ்வோம்’’**

## பயிற்சி

**வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. ஆசிரியர் ஆரணியை ஏன் பாராட்டினார்?

2. ஆசிரியர் கூறிய அறிவுரை யாது?


3. ஆரணியிடம் காணப்பட்ட நற்பண்புகள் யாவை?

## செயற்பாடு

நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளைக் கூறுவோம்.

# 17 பழம் சுடுமா?

ஒருநாள் ஔவைப்பாட்டி காட்டு வழியாக வந்தார். வெயில் நேரம். பாட்டி களைத்துப் போனார். ஒரு நாவல் மர நிழலில் இருந்தார். அண்ணாந்து பார்த்தார். நாவல் மரத்தின்மேல் ஒரு சிறுவன் பழம் தின்றுகொண்டு இருந்தான்.



‘‘தம்பி, எனக்கும் பழம் போடு’’ என்றார் ஔவைப் பாட்டி. ‘‘பாட்டி, உங்களுக்கு சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா?’’ என்றான் சிறுவன். பாட்டிக்கு விளங்கவில்லை.

‘‘சுட்டபழமே போடு,’’ என்றார். சிறுவன் கிளையை உலுப்பினான். பழங்கள் மணலில் விழுந்தன. பாட்டி பழத்தை எடுத்து அதில் படிந்திருந்த மணலை ஊதினார். ‘‘பாட்டி, பழம் சுடுகிறதா? நன்றாக ஊதி ஊதிச் சாப்பிடுங்கள்’’ என்றான் சிறுவன். அப்போதுதான் பாட்டிக்கு உண்மை புரிந்தது.

‘‘கெட்டிக்காரனாக இருக்கிறாயே! யார் நீ?’’ என்றாள் பாட்டி. ‘‘என்னைத் தெரியவில்லையா?’’ என்று சிரித்தான் சிறுவன். பாட்டி உற்றுப் பார்த்தார். சிறுவன் முருகனாகக் காட்சி கொடுத்தான்.

**கடவுள் எங்கும் நிறைந்தவர்;**

**எல்லாம் அறிபவர்.**

## பயிற்சி

**இடைவெளி நிரப்புவோம்.**

1. ______________________ மர நிழலில் இளைப்பாறினார்.
2. ______________________ மரக்கிளையை உலுப்பினான்.
3. ______________________ கீழே விழுந்தன.
4. பாட்டி ______________________ ஊதினாள்.
5. சிறுவன் ______________________ காட்சி கொடுத்தான்.

## செயற்பாடு

'பழம் சுடுமா?' கதையை நாடகமாக நடிப்போம்.

# 18 துயர் துடைப்போம்

அகிலனும் ஆரணியும் அம்மாவும் அப்பாவும் உணவருந்திக் கொண்டிருந்தார்கள். அப்போது செய்தி ஒலிபரப்பானது.

‘‘சுந்தரபுரம் கிராமத்தில் பெரும் வெள்ளம். மக்கள் பெரும் அவலத்தில். பாதிக்கப்பட்டவர்கள் பாடசாலை களில் தஞ்சம். உணவு, உடை, நீர் அவசரமாகத் தேவை’’

அச்செய்தி எல்லோர் மனதையும் பாதித்தது.



‘‘நாங்கள் அவர்களுக்கு உதவ வேண்டும்’’ ஆரணி கூறினாள்.

‘‘நாம் எமது விசேட சேமிப்பு உண்டியலை எடுப்போம்; நண்பர்களையும் அழைப்போம்’’ என்றான் அகிலன். அகிலனின் திட்டத்தை அப்பா பாராட்டினார். ‘‘அம்மா எனது பிறந்தநாளுக்காக நீங்கள் பணம் வைத்திருக்கிறீர்கள் அல்லவா? அந்தப் பணத்தை இந்த உண்டியலில் போடுங்கள்’’ ஆரணி கூறினாள். அப்பா பெருமிதத்தோடு தன் மகளைப் பார்த்தார்.

அகிலனும் நண்பர்களும் வீடு வீடாகச் சென்றார்கள். உண்டியலில் பணம் சேர்த்தார்கள். பிள்ளைகளின் சேவை மனப்பான்மை ஊர் மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. எல்லோரும் மனம் விரும்பி உதவி செய்தார்கள். பிள்ளைகளை வாழ்த்தினார்கள்.

பணம் சேர்ந்தது. அகிலனும் நண்பர்களும் பணத்தை அதிபரிடம் கொடுத்தார்கள். பாடசாலையில் காலைக்கூட்டம் நடைபெற்றது.

‘‘துன்பப்படுபவர்களுக்கு நாம் என்றும் உதவ வேண்டும்’’என்றார் அதிபர். அகிலன் குழுவினரைப் பாராட்டிப் பேசினார். அவர் அகிலனையும் ஆரணியையும் நண்பர்களையும் மேடைக்கு அழைத்தார். மாணவர்கள் அனைவரும் எழுந்து நின்று கைதட்டினார்கள்.

**துன்பம் துடைப்பதில் இன்பம் காண்போம்.**

## பயிற்சி

**ஒவ்வொருவரும் செய்த நற்செயலை எழுதுவோம்.**

ஆரணி

_______________

அகிலன்

_______________

அப்பா

_______________

அதிபர்

_______________

## செயற்பாடு

பணம் சேமிப்போம். பிறருக்கு உதவுவோம்.

# 19 நவராத்திரி வழிபாடு

சக்தி விரதங்களுள் நவராத்திரியும் ஒன்று. சக்தியை வழிபடும் ஒன்பது இரவுகள் நவராத்திரி எனப்படும். புரட்டாதி மாதத்தில் நவராத்திரி கொண்டாடப்படும்.



நவராத்திரி காலத்தில் முதல் மூன்று நாட்கள், வீரத்தை வேண்டி துர்க்கையை வழிபடுவோம். அடுத்த மூன்று நாட்கள் செல்வத்தை வேண்டி இலக்குமியை வழிபடுவோம். இறுதி மூன்று நாட்கள் கல்வி, கலைகளை வேண்டி சரஸ்வதியை வழிபடுவோம்.

கும்பம் வைத்து, கும்பத்திலே சக்தியை வழிபடுவோம். நவதானியங்களை முளைக்க வைப்போம். கொலு வைப்போம். படையல்கள் படைப்போம். தோத்திரப் பாடல்களைப் பாடி வழிபடுவோம்.



பத்தாம் நாள் விஜயதசமி விழா நடைபெறும். விஜயதசமியில் ஏடு தொடக்குவார்கள்; சங்கீதம், நடனம் போன்ற கலைகளைக் கற்க ஆரம்பிப்பார்கள்.



*திருச்சிற்றம்பலம்*

**ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்**
**ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய**
**உருப் பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே**
**இருப்பள் இங்கு வாராது இடர்.**

*திருச்சிற்றம்பலம்*

**அம்பிகையைச் சரண் அடைவோம்.**

## பயிற்சி

**சரியாக இணைப்போம்.**

| | |
|---|---|
| நவராத்திரி | சரஸ்வதி |
| கல்வி | ஏடு தொடக்குதல் |
| வீரம் | இலக்குமி |
| செல்வம் | ஒன்பது இரவுகள் |
| விஜயதசமி | துர்க்கை |

## செயற்பாடு

வகுப்பறையில் கொலு வைப்போம்.

# 20 கை நிறைய உணவு

விநாயகபுரம் மகாவித்தியாலய மாணவர்கள் கல்விச் சுற்றுலா சென்றனர். அகிலனுக்கும் நண்பர்களுக்கும் ஒரே கொண்டாட்டம். ஆசிரியர்களும் மாணவர்களுடன் குதூகலமாகப் பாடினார்கள்.



நண்பகல் வேளை முருகன் கோயிலுக்கு வந்தனர். அனைவரும் கேணியில் கை, கால், முகம் கழுவினர். வரிசையாகக் கோயிலுக்குள் சென்றனர். சுவாமி தரிசனம் செய்தனர். விபூதி, பிரசாதம் பெற்றனர்.

கோயிலின் பின்புறம் பூங்கா ஒன்று இருந்தது. அகிலனும் நண்பர்களும் பூங்காவின் அழகை இரசித்தனர். சிறிது நேரம் விளையாடினார். ஆசிரியர் எல்லோரையும் உணவு உண்ணுமாறு கூறினார். மாணவர்கள் தாம் கொண்டு வந்த உணவை உண்ண ஆயத்தமாகினர். அமுதாவின் உணவுப் பெட்டியைக் காணவில்லை. அவள் விக்கிவிக்கி அழுதாள். அகிலன் அவளைச் சமாதானப்படுத்த முயன்றான்.

அகிலனும் நண்பர்களும் தாம் கொண்டு வந்த உணவை அமுதாவுடன் பகிர்ந்து உண்டனர். அமுதா சிரித்தாள். எல்லோரும் மகிழ்ந்தனர். ஆசிரியர் அனைவரையும் பாராட்டினார்.

**பகிர்ந்து உண்போம்; பசி தீர்ப்போம்.**

## பயிற்சி

**விடை எழுதுவோம்.**

கதையில் வெளிப்படும் நற்பண்புகளை எழுதுவோம்.

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

4. ______________________________

## செயற்பாடு

கதையை நாடகமாக நடிப்போம்.

# 21 கொன்றை வேந்தன்

ஔவையார் எம்மைப் போன்ற சிறுவர்களுக்காகப் பல நீதி நூல்களைப் பாடினார். அவற்றுள் கொன்றை வேந்தனும் ஒன்று. ஔவையார் விநாயகரை வணங்கி, நூலைப் பாடத் தொடங்கினார்.

'கொன்றை வேந்தன்' என்று தொடங்குவதால் அந்த நூலைக் கொன்றை வேந்தன் என்று அழைக்கிறோம்.

**கொன்றை வேந்தன் செல்வன் அடி இணை**
**என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.**

*1. அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்*

*2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று*

3. இல்லற மல்லது நல்லறம் அன்று

4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்

5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு

6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

7. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்

8. ஏவா மக்கள் மூவா மருந்து

*9. ஐயம் புகினும் செய்வன செய்*

*10. ஒருவனைப் பற்றி ஓரகத்து இரு*

*11. ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்*

*12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு*

**நீதிநூல் கற்போம்; நல்லவராக வாழ்வோம்.**

## பயிற்சி

**கொன்றை வேந்தன் அடிகளுள் விரும்பிய ஐந்தை எழுதுவோம்.**

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

4. ______________________________

5. ______________________________

## செயற்பாடு

கொன்றை வேந்தன் அடிகளை மனனம் செய்து ஓதுவோம்.

## பெரிய புராணம்



என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

-சேக்கிழார்